RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 130 | மே.16, 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## சிந்து நதி நீர் ஒப்பந்தம்: பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவுக்கு பாகிஸ்தான் அழைப்பு

புதுடெல்லி: மே.16-

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா நிறுத்தி வைத்துள்ள சிந்து நதி நீர் ஒப்பந்தம் தொடர்பாக இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் கூறியுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி லஷ்கர் இ தொய்பா பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 அப்பாவி சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதையடுத்து ஏப்ரல் 23ம் தேதி பிரதமர் மோடி தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில், எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு ஆதரவு அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்தும் வரை, இந்தியா பாகிஸ்தான் இடையே கடந்த 1960 ஆண்டு செய்து கொள்ளப்பட்ட சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்படுகிறது என்பது உட்பட 5 முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

பாகிஸ்தானின் குடிநீர் தேவையில் 70 சதவீதத்துக்கும் மேல் பூர்த்தி செய்யக்கூடியது என்பதால், சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்திவைப்பு அந்நாட்டுக்கு மிகப் பெரிய இடியாக அமைந்தது.

தொடர்ந்து மே 7ம் தேதி பாகிஸ்தானின் 9 பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா அதிரடி தாக்குதல் நடத்தி அவற்றை அழித்தது. இதில், நூற்றுக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் உயிரிழந்ததாக இந்திய ராணுவம் தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து இரு நாட்டு ராணுவங்களுக்கு இடையே தொடர்ந்து 4 நாட்கள் நடந்த மோதலில், பாகிஸ்தான் ராணுவம் கடும் இழப்புகளைச் சந்தித்தது. இதையடுத்து, மே 10ம் தேதி பாகிஸ்தான் டிஜிஎம்ஓ, இந்திய டிஜியும்ஓவை தொடர்பு கொண்டு ராணுவ நடவடிக்கையை நிறுத்திக் கொள்ள வேண்டுகோள் விடுத்ததை அடுத்து, மோதல் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், பாகிஸ்தானின் நீர்வள அமைச்சக செயலாளர் சையத் அலி முர்தாசா, இந்தியாவின் நீர்வள செயலாளர் தேபாஸ்ரீ முகர்ஜிக்கு கடிதம் எழுதியுள்ளார். இந்த கடிதம் ஒரு வாரத்திற்கு முன்பு வந்துள்ளது. அதில், சிந்து நதி நீர் ஒப்பந்தம் தொடர்பாக இந்தியாவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகவும் எனவே, பாகிஸ்தானின் சிந்து நதி ஆணையருடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய பிரதிநிதிகளை இந்தியா பரிந்துரைக்குமாறு கேட்டுக் கொண்டதாகவும் பெயர் வெளியிட விரும்பாத அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1960 முதல் நடைமுறையில் உள்ள Indus Waters Treaty(IWT) ஒப்பந்தத்தை அமல்படுத்துவதற்காக இரு நாடுகளும் சிந்து நதி ஆணையர்களை நியமித்துள்ளன. இந்த ஆணையர்களின் கடைசி சந்திப்பு மே 2022 இல் டெல்லியில் நடந்ததாகக் கூறப்படுகிறது. ஜனவரி 2023 முதல், ஒப்பந்தத்தை திருத்துவது குறித்த பேச்சுவார்த்தைகளைத் தொடங்க இந்தியா, பாகிஸ்தானுக்கு 4 முறை கடிதம் எழுதியுள்ளது, ஆனால், "திருப்திகரமான பதில்" கிடைக்கவில்லை என்று வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் அக்கடிதங்களில், IWTஐ நிறுத்தி வைத்ததற்கும் ஒப்பந்தத்தின் விதிமுறைகளை மீறுவதற்கும் பாகிஸ்தான் ஆட்சேபனை தெரிவித்துள்ளதாக தகவல்.

## ஆளுநர்களுக்கு காலக்கெடு நிர்ணயிப்பதில் ஏன் ஆட்சேபனை? குடியரசுத் தலைவருக்கு முதல்வர் ஸ்டாலின் கண்டனம்



சென்னை: மே.16

மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர்களுக்கு காலக்கெடு நிர்ணயிக்க முடியுமா என்று கேள்வியெழுப்பி குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உச்ச நீதிமன்றத்துக்கு கடிதம் எழுதியுள்ளார். இதனை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடுமையாக கண்டித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், 'தமிழக ஆளுநர் வழக்கு மற்றும் பிற முன்னுதாரணங்களில் ஏற்கனவே உச்ச நீதிமன்றம் தீர்த்து வைத்த அரசியலமைப்பு நிலைப்பாட்டைத் தகர்க்க முயற்சிக்கும் மத்திய அரசின் குடியரசுத் தலைவரின் கடிதத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மக்களின் ஆணையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில் பாஜகவின் கட்டளைப்படி தமிழக ஆளுநர் செயல்பட்டார் என்பதை இந்த முயற்சி தெளிவாக அம்பலப்படுத்துகிறது.

ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை, மத்திய அரசின் முகவர்களாகச் செயல்படும் ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைப்பதன் மூலம் பலவீனப்படுத்தும் ஒரு தீவிர முயற்சி இது. இது சட்டத்தின் மகத்துவத்தையும் அரசியலமைப்பின் இறுதி விளக்கவுரையாளரான உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தையும் நேரடியாக இக்கடிதம் சவால் செய்கிறது.

›› ஆளுநர்கள் செயல்படுவதற்கான காலக்கெடுவை நிர்ணயிப்பதில் ஏன் எந்த ஆட்சேபனையும் இருக்க வேண்டும்?

›› மசோதா ஒப்புதலில் காலவரையற்ற தாமதங்களை அனுமதிப்பதன் மூலம் பாஜக தனது ஆளுநர்களின் தடையை சட்டப்பூர்வமாக்க முயற்சிக்கிறதா?

›› பாஜக அல்லாத மாநில சட்டமன்றங்களை முடக்க மத்திய அரசு விரும்புகிறதா?

நமது நாடு ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளது. இந்தக் குறிப்பில் எழுப்பப்பட்டுள்ள கேள்விகள், அரசியலமைப்பின் அடிப்படை அதிகாரப் பகிர்வை சிதைத்து, எதிர்க்கட்சிகள் ஆதிக்கம் செலுத்தும் மாநில சட்டமன்றங்களை செயலிழக்கச் செய்யும் பாஜக தலைமையிலான மத்திய அரசின் தீய நோக்கத்தை வெளிப்படுத்துகின்றன. எனவே, இது மாநில சுயாட்சிக்கு ஒரு தெளிவான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

இந்த மோசமான சூழ்நிலையில், அரசியலமைப்பைப் பாதுகாக்க இந்த சட்டப் போராட்டத்தில் இணையுமாறு அனைத்து பாஜக அல்லாத மாநிலங்களையும் கட்சித் தலைவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் போரில் நாம் நமது முழு பலத்துடன் போராடுவோம். தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெற்றி பெறும்!' எனத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் வழங்கப்பட்ட உச்ச நீதிமன்ற தீர்ப்பை முன்வைத்து, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உச்ச நீதிமன்றத்துக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் ஆளுநர்களுக்கு, குடியரசுத் தலைவருக்கு காலக்கெடு விதிக்க முடியுமா உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை அவர் கேட்டுள்ளார்.

## இந்தியா நடத்திய 'ஆபரேஷன் சிந்தூர்' தாக்குதலில் பாக். விமான படையின் 20% உள்கட்டமைப்புகள் நாசம்




புதுடெல்லி: மே.16-

கடந்த மாதம் 22ம் தேதி காஷ்மீரின் பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். அதற்கு பதிலடி கொடுக்க இந்தியா ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் தாக்குதல் நடத்தியது. இதில் கடந்த 10ம் தேதி இந்தியா நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் விமானப் படை, ராணுவத்துக்கு பேரிழப்பு ஏற்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டருகே இந்தியா நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் பல்வேறு பதுங்கு குழிகள், சுரங்கங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பாகிஸ்தான் ராணுவத்தின் பல தளங்களை இந்தியா தாக்குதல் நடத்தி அழித்துள்ளது. சுமார் 12க்கும் மேற்பட்ட பாகிஸ்தான் ராணுவ தளங்கள் மீது இந்தியா தாக்குதல் நடத்தி உள்ளது.

இதுகுறித்து பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் நேற்றுமுன்தினம் கூறியதாவது: இந்திய ராணுவ தளங்கள், பொதுமக்கள் வாழும் இடங்களை குறி வைத்து பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. அவற்றை இந்திய ஏவுகணைகளும், ட்ரோன்களும் முறியடித்தன. அதற்கு பதிலடியாக பாகிஸ்தானின் சர்கோதா மற்றும் போலாரி விமானப் படை தளங்களில் இந்தியா கடும் தாக்குதல் நடத்தியது. அங்குள்ள வெடிபொருள் கிடங்கு மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

அந்த பகுதிகளில் தான் பாகிஸ்தானின் எப் 16, ஜே17 போன்ற போர் விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இந்த தாக்குதலில் பாகிஸ்தான் விமானப் படை அதிகாரி உஸ்மான் யூசுப் மற்றும் விமானப் படையின் 4 வீரர்கள் உட்பட 50 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் பல போர் விமானங்கள் நொறுங்கி உள்ளன.

நூர் கான், ரபிகியூ, முரித், சுக்குர், சியால் கோட், பஸ்ருர், சுனியன், சர்கோதா, ஸ்கர்து, பலோரி, ஜகோபாபாத் போன்ற பாகிஸ்தானின் ராணுவ தளங்கள் சேதம் அடைந்தன. இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலுக்கு முன்பும், தாக்குதலுக்குப் பின்பும் எடுக்கப்பட்ட சேட்டிலைட் படங்கள் அதை உறுதிப்படுத்தி உள்ளன.

வீடியோக்கள் வெளியீடு: முன்னதாக இந்திய தாக்குதலில் நொறுங்கி போன பாகிஸ்தானின் விமானப் படை தளங்கள் தொடர்பான வீடியோவை கடந்த திங்கட்கிழமை இந்திய விமானப் படை வெளியிட்டது. அதேபோல் பாகிஸ்தான் ஏவிய ட்ரோன்கள், ஏவுகணைகளை நடுவானிலேயே சுட்டு வீழ்த்திய வீடியோவும் வெளியிடப்பட்டது.

## கடலூர் சிப்காட்டில் பாய்லர் டேங்க் வெடித்து விபத்து
### அருகிலுள்ள வீடுகளில் பாதிப்பு; 19 பேருக்கு சிகிச்சை

கடலூர்: மே.16-

கடலூர் சிப்காட்டில் உள்ள தனியார் சாயப்பட்டறை ரசாயனம் கலந்த பாய்லர் டேங்க் வெப்பத்தில் வெடித்தது. இதனால் அருகில் உள்ள கிராமத்தில் 20 க்கும் மேற்பட்ட வீடுகளில் ரசாயனம் கலந்த வெப்பத் தண்ணீர் புகுந்து 19 பேர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடலூர் சிப்காட் தொழில் பேட்டையில் குடிகாடு கிராமம் அருகே தனியார் சாயப்பட்டறை ஒன்று இயங்கி வருகிறது. இந்த நிலையில் இன்று ( மே.15) அதிகாலை சுமார் 2 மணி அளவில் சாயப்பட்டறை கம்பெனியில் உள்ள ஆறு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ரசாயன கழிவு நீர் பாய்லர் டேங்க் அதிக வெப்பத்தினால் வெடித்தது.

இதனால் அருகிலுள்ள சுமார் 20 வீடுகளில் ரசாயன கழிவுநீர் கலந்த வெப்ப தண்ணீர் ஆறு போல ஓடி புகுந்தது. இதில் கண்ணெரிச்சல், மயக்கம், வாந்தி ஏற்பட்டு பாதிக்கப்பட்ட 19 பேர் கடலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ரசாயன கழிவு நீர் புகுந்ததில் சில வீடுகளில் சுவர் இடிந்து விழுந்து உள்ளது.


இந்த விபத்து தொடர்பாக அரசு அதிகாரிகள் யாரும் வராததால் திமுக கிழக்கு ஒன்றிய துணை செயலாளர் சிவா தலைமையில் அப்பகுதியைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் கடலூர் சிதம்பரம் நெடுஞ்சாலையில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்த தகவல் அறிந்த கடலூர் வட்டாட்சியர் மகேஷ் மற்றும் காவல்துறையினரை சம்பவ இடத்திற்கு சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். இதனையடுத்து அனைவரும் கலைந்து சென்றனர். இந்த விபத்து குறித்து கடலூர் முதுநகர் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதுதான் சிப்காட் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## புதுக்கோட்டை அருகே பிறந்தநாள் விழாவில் உணவு சாப்பிட்டதில் ஒருவர் பலி
### 30 பேருக்கு உடல்நல பாதிப்பு

புதுக்கோட்டை: மே.16-

புதுக்கோட்டை அருகே பிறந்தநாள் விழாவில் உணவு சாப்பிட்ட ஒருவர் உயிழந்தார். 30 பேருக்கு உடல்நல பாதிப்பு ஏற்பட்டது.



வேளாணியில் சத்யராஜ் என்பவர் வீட்டில் நடந்த பிறந்தநாள் விழாவில் உணவு சாப்பிட்ட 30 பேருக்கு பாதிப்பு ஏற்பட்டது. பிறந்தநாள் விழாவில் அசைவ உணவு சாப்பிட்ட 30க்கும் மேற்பட்டோருக்கு உடல்நல பாதிப்பு ஏற்பட்டது. உடல்நல பாதிக்கப்பட்ட கருப்பையா என்பவர் சிகிச்சை எடுக்காத நிலையில் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

## 'பணியின் போது பாதுகாப்புடன் இருக்கவேண்டும்' வனத்துறை ஊழியர்களுக்கு அமைச்சர் வேண்டுகோள்

சென்னை: மே.16-

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி பகுதியில் பணிபுரியும் வனவர் கார்த்திகேயன் மற்றும் வனக்காவாளர் திவாகர் இருவரும் புதன்கிழமை (மே14) மாலை 06.20 மணியளவில் ஊத்தங்கரையில் இருந்து மத்தூர் நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது மத்தூர் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கமலாபுரம் கிராமம் அருகே உள்ள முருகர் கோவில் அருகே தேசிய நெடுஞ்சாலை எண் 77 ல், பெங்களூரில் இருந்து திருவண்ணாமலை நோக்கி வந்த கர்நாடகா அரசு பேருந்து மோதி வன காவலர் மற்றும் வனவர் இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்ட செய்தியை அறிந்து மிகவும் மன வருந்தம் அடைந்தேன். பாதிக்கப்பட்ட வன பணியாளர்கள் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத்துறையில் பணியாற்றும் வனக்காவலர், வனக்காப்பாளர் உட்பட அனைவரும் பணியின் போதும், சாலையில் பயணிக்கும் போதும் மிகவும் எச்சரிக்கையாகவும் பாதுகாப்புடனும் செல்லவேண்டும் என அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## 'ரூ.7 கோடி கூடுதல் நிதியில் எத்தனை பேருக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்குவார்கள்?' ராமதாஸ்

சென்னை: மே.16-

தமிழக அரசால் செயல்படுத்தப்படும் மாதம் ரூ.1000 மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் புதிய பயனாளிகளைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் வரும் ஜூன் 4 ஆம் நாள் முதல் பெறப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக கூடுதல் நிதியே ஒதுக்காமல் புதிய பயனாளிகள் சேர்க்கப்படுவார்கள் என்று தமிழக அரசு அறிவித்திருப்பதை மக்களை ஏமாற்றும் செயலாகவே பார்க்க வேண்டியுள்ளது.

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, இன்றைய நிலையில் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின்படி பயனடையும் குடும்பத் தலைவிகளின் எண்ணிக்கை 1.15 கோடி. அவர்களுக்கு மாதம் ரூ.1000 வீதம் நிதி வழங்க வேண்டுமானால், அதற்கு ரூ.13,800 கோடி தேவை. ஆனால், 202526ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் இந்தத் திட்டத்திற்காக ரூ.13,807 கோடி மட்டும் தான் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தேவையை விட வெறும் ரூ.7 கோடி மட்டும் தான் அதிகம் ஆகும்.

மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின்படி ஒருவருக்கு மாதம் ரூ.1000 வீதம் ஆண்டுக்கு ரூ.12,000 வழங்க வேண்டும். தமிழக அரசு கூடுதலாக ஒதுக்கியுள்ள ரூ.7 கோடியைக் கொண்டு 5,833 பேருக்கு மட்டும் தான் கூடுதலாக உரிமைத் தொகை வழங்க முடியும். ஆனால், ஜூன் 4ஆம் தேதி முதல் தமிழகம் முழுவதும் 9 ஆயிரம் மையங்களில் இதற்கான விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

ஒவ்வொரு மையத்திலும் சராசரியாக 100 தகுதியான விண்ணப்பங்கள் பெறப்படுவதாக வைத்துக் கொண்டாலும் 9 லட்சம் பேருக்கு கூடுதலாக உரிமைத் தொகை வழங்க வேண்டும். ஆனால், அரசு ஒதுக்கியுள்ள நிதியைக் கொண்டு 9 ஆயிரம் பேருக்குக் கூட உரிமைத் தொகை வழங்க முடியாது எனும் போது தமிழக அரசு ஏன் இதற்காக பிரமாண்ட அறிவிப்பை வெளியிட வேண்டும்?

2021ம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் திமுக ஆட்சிக்கு வந்தால் அனைத்துக் குடும்பத்தலைவிகளுக்கு மாதம் தலா ரூ.1000 வழங்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், தகுதியுடையவர்களுக்கு மட்டும் தான் உரிமைத் தொகை என்று நிலையை மாற்றிக் கொண்ட தமிழக அரசு, அதன்படி தகுதியுள்ளவர்களிடமிருந்து ஒரு கோடியே 63 லட்சத்து 57 ஆயிரத்து 195 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

அதில் 1 கோடியே 6 லட்சத்து 52 ஆயிரத்து 198 பேருக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டது. மீதமுள்ள 56 லட்சம் விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அதன் பின் தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்களை அளித்தவர்கள் மேல்முறையீடு செய்தனர். அவர்களிலும் 9 லட்சம் பேரின் மனுக்கள் மட்டுமே ஏற்கப்பட்டன.

மகளிர் உரிமைத் தொகை தொடர்பான ஒவ்வொரு அறிவிப்பின் போதும் தமிழக மக்கள் நம்பி ஏமாறுவது வாடிக்கையாகி விட்டது. இன்னொருமுறை தமிழக மக்களை அரசு ஏமாற்றக் கூடாது. புதிதாக பெறப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் எவ்வளவு பேருக்கு மகளிர் உரிமைத் தொகை புதிதாக வழங்கப்படவுள்ளது?

ரூ.7 கோடி மட்டுமே கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், கூடுதல் பயனாளிகளுக்கு உரிமைத் தொகை வழங்க நிதி எங்கிருந்து கிடைக்கும்? அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதம் ரூ.1000 உரிமைத் தொகை வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதி எப்போது நிறைவேற்றப்படும்? என்பன உள்ளிட்ட வினாக்களுக்கு தமிழக அரசு விடையளிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



ஜி.எம்.செஸ் அகாடமி மற்றும் தனலட்சுமி பொறியியல் கல்லூரி சார்பில்

## முதலாவது மாநில அளவிலான சதுரங்கப் போட்டி, தாம்பரம் அடுத்த மணிமங்கலத்தில் உள்ள கல்லூரி வளாகத்தில் நடந்தது

மணிமங்கலம், மே.16-

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றிய மணிமங்கலம் ஊராட்சிக் குட்பட்ட தனலட்சுமி பொறியியல் கல்லூரி சார்பில் முதலாவது மாநில அளவிலான சதுரங்கப் போட்டி, இதில் 8 10 13 மற்றும் 25 வயது பிரிவில் இருபாலருக்கும், சுவிஸ் அடிப்படையில் பிடே விதிப்படி போட்டிகள் நடத்தப்பட்டன.

500 சிறுவர் சிறுமியர் பங்கேற்றனர் இதில் எட்டு வயது சிறியவர் பிரிவில் செங்கல்பட்டு சேர்ந்த வியன், சிறுமியரில் செங்கல்பட்டு ராகவி முதலிடங்களை பிடித்தனர்.

அதேபோல் 10 வயது சிறுமியர் பிரிவில் சென்னை அக்ஷரா, சிறுவ வரில் சென்னை லார்ஷன், 13 வயதில் சிவகங்கை நிதின் ராமசாமி காஞ் சிபுரம் அமுதினி ஆகியோர் முதலிடங்களை வென்றனர் தொடர்ந்து 23வது பிரிவில் பெண்களில் சென்னை ஐஸ்வர்யா ஆண்களில் நெல்லை மணிகண்ட பிரபு ஆகியோர் முதலிடத்தை கைப்பற்றினர் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தனலட்சுமி கல்லூரி தலைவர் ராமமூர்த்தி, செங்கல்பட்டு சதுரங்க சங்க செயலாளர் கிருஷ்ண மூர்த்தி, ஜி.எம்.செஸ் அகாடமி செயலாளர் மாசிலாமணி ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.



## வேலூரில், போக்குவரத்து துறை சார்பில் பள்ளி மாணவருக்கு பேருந்துகளில் பாதுகாப்புகள் உறுதி செய்யும் நோக்கத்தோடு, தனியார் பள்ளி வாகனங்கள் சோதனை

மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி மற்றும் வட்டார போக்குவரத்து துறை அலுவலர் சுந்தர்ராஜன் ஆகியோர் ஆய்வு

வேலூர், மே.16-

வேலூர் மாவட்டம், காட்பாடி அருகே, வேலூர் மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளி வாகனங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின்

மூலம் ஆய்வு செய்யும் பணியினை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி மற்றும் வட்டாரப் போக்குவரத்து துறை அலுவலர் சுந்தர்ராஜன் ஆகியோர்

தனியார் பள்ளி மைதானத்தில் வாகன சோதனையை தொடங்கி வைத்து வாகனங்களை ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின்போது வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) தயாளன், வட்டாட்சியர் ஜெகதீசன், போக்குவரத்து துறை பிரேக்கிங் இன்ஸ்பெக்டர்கள் ராஜ் குமார், ராஜேஷ் கண்ணா, காட்பாடி தீயணைப்பு துறை நிலைய அலுவலர் முருகேசன் துறை சார்ந்த பணியாளர்கள் மற்றும் போக்குவரத்து துறை, கல்வித்துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



## எடப்பாடியார் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு பெரும்பாக்கம் பழன்டியம்மன் கோவிலில் 1000 திற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம்

பெரும்பாக்கம், மே. 16-

சென்னை புறநகர் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கத்தில் மே 12 ல் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எடப்பாடி, கே. பழனிச்சாமி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அம்மா பேரவை துணைச் செயலாளர், பரங்கிமலை கிழக்கு ஒன்றிய செயலாளருமான, பெரும்பாக்கம், ராஜசேகர் தலைமை நிகழ்ச்சி ஏற்பாட்டில் பெரும்பாக்கம் பழன்டியம்மன் கோவிலில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. தொடர்ந்து 1000 திற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கி விழாவை அனைவரும் சிறப்பித்தனர். இந்நிகழ்வில் சென்னை புறநகர் மாவட்ட துணைச் செயலாளர், வழக்கறிஞர் பிரிவு, எ. ராஜாராம், நடராஜன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# வேலூர் மாவட்டம், வேலங்காடு வல்லண்டராமம் பகுதியில் கோலாகலமாக நடைபெற்ற பொற்கொடி அம்மன் புஷ்பரத ஏரி தேர்த் திருவிழா

**உள்ளூர் மற்றும் வெளியூர் என லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று உப்பு, மிளகு சூறையிட்டு நேர்த்திக்கடன் செலுத்தி சிறப்பு வழிபாடு**

வேலூர், மே.16-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, வேலங்காடு ஏரித் தேர் தேர் திருவிழா, வேலூர் மாவட்டத்தில் நடைபெறும் பிரசித்தி பெற்ற திருவிழாக்களில் அணைக்கட்டு அருகே வேலங்காடு, வல்லண்டராமம், அன்னாசிபாளையம் மற்றும் பனங்காடு கிராமங்களை ஒன்றிணைத்த பொற்கொடி அம்மன் புஷ்பரத ஏரித்திருவிழாவும் சிறப்பு மிகுந்தது.



அனைத்து மக்களும், அவர்களுக்கு வாழ்வாதாரமாக விளக்கும் கால்நடைகளும் நோய் நொடியின்றி இருக்க இந்த திருவிழா பல 100 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருவதாக வரலாறு உள்ளது. இவ்வாறு சிறப்பு வாய்ந்த திருவிழாவை வல்லண்டராமம், அண்ணாச்சிபாளையம், வேலங்காடு, பனங்காடு ஆகிய கிராம மக்கள் வழக்கம்போல் இனைந்து நடத்துகின்றனர்.

அதன்படி சித்திரை மாதம் கடைசி புதன்கிழமையான 14-05-2025 புதன்கிழமை அன்று இத்திருவிழா நடைபெற்றது. இந்த தேர் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், ஆந்திரா, கர்நாடகா உள்பட பல்வேறு மாநிலங்களை லட்சக்கணக்கான பக்தர்கள் குடும்பம் குடும்பமாக கலந்து கொண்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஏராளமான பக்தர்கள் தங்களது பாரம்பரிய வழக்கப்படி பச்சை ஓலை, மாங்கொத்து வேப்பிலை கொத்து புங்க மரம் கிளைகள் என தோரணங்கள் கட்டிய மாட்டு வண்டி, டிராக்டர், வேன், ஆட்டோக்களில் வந்து இந்த திருவிழாவை கண்டு களித்தனர். இத்திருவிழாவையொட்டி அம்மனை புஷ்பரதத்தில் எழுந்தருள செய்யப்பட்டது. இதனையடுத்து வல்லண்டராமம், அண்ணாசிபாளையம் ஆகிய கிராமங்களில் வாணவேடிக் கையுடன் புஷ்பரத உலா கோலாகலமாக நடைபெற்றது.

பின்னர் அம்மன் புஷ்பரதத்தில் முக்கிய நாளான புதன்கிழமை வேலங்காடு ஏரியில் எழுந்தருள இது பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. ஏரிக்கோவிலுக்கு காலை 10 மணிக்கு வரவேண்டிய புஷ்பரதம் சரியாக பகல் 1.30 மணிக்கு வந்தது.

இதனை தொடர்ந்து அங்கு திரண்டு இருந்த பக்தர்கள் பொங்கல் வைத்து வழிபட்டு அன்னதானம் வழங்கினர். இது மட்டுமின்றி அனைத்து சாலைகளிலும் இந்த கோயிலுக்கு வரும் வழிகளில் 100 அடிக்கு ஒரு இடத்தில் தண்ணீர் பந்தல் வைத்து மோர் பானகம் அன்னதானம் தயிர் சாதம் கஞ்சி கேழ்வரகு கூழு என பக்தர்களுக்கு காலையிலிருந்து மாலை வரை வழங்கியபடியே பல்வேறு சேவைகளை செய்வது வழக்கமாக இருந்து வருகின்றது. இந்த ஆண்டு அதிகரித்துள்ளது. ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஏரியில் பொங்கல் வைத்து வழிபட்டனர்.

விழாவுக்கு வந்த விவசாயிகள் தங்கள் கால்நடைகளையும் அழைத்து வந்திருந்தனர். கால்நடைகளுடன் கோவிலை 3 முறை வலம் வந்தனர்

இந்த விழாவிற்கு சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட்டன மேலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு, வருவாய் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் தீயணைப்புத்துறையினர், மருத்துவ குழுவினர் என பல்வேறு அரசு சார்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தி இத்திருவிழாவை சிறப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மதுரை சித்திரை திருவிழாவில் எங்கேயும் சாதிய பாகுபாடு கிடையாது : நீதிபதிகள் பாராட்டு

மதுரை, மே.16-

மதுரை சித்திரை திருவிழாவில் எங்கேயும் சாதிய பாகுபாடு கிடையாது என்று நீதிபதிகள் பாராட்டு தெரிவித்துள்ளனர். மேலும் பேசிய நீதிபதிகள், "அழகர் மலையில் இருந்து கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்க வழிநெடுகிலும் வீதி வீதியாக வருகிறார். அனைத்து மக்களும் கள்ளழகரை தூக்குகிறார்கள், ஒருவர் மீது ஒருவர் தண்ணீரை பீய்ச்சி அடிக்கின்றனர். சமூகத்தில் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும்; மரியாதை என்பது தானாக வர வேண்டும்."இவ்வாறு தெரிவித்தார்.

## தண்டவாள பராமரிப்பு பணி காரணமாக 21 புறநகர் ரயில்கள் ரத்து: தெற்கு ரயில்வே அறிவிப்பு

சென்னை, மே.16-

பொன்னேரி - கவரைப்பேட்டை ரயில் நிலையங்களுக்கு இடையே தண்டவாள பராமரிப்பு பணி பெறுவதால் 21 புறநகர் ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. சென்னையில் மிகவும் முக்கியமான போக்குவரத்துகளில் ஒன்றான மின்சார ரயிலை தினசரி லட்சகணக்கான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் அவ்வப்போது பராமரிப்பு பணிகள் காரணமாக சென்னை மின்சார ரயிலானது ரத்து செய்யப்படுவது வழக்கம் ஆகும்.

இந்த ரயில்களை வேலைக்கு செல்வோர், கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள், வியாபாரிகள் என அனைத்து தரப்பு மக்களும் இந்த மின்சார ரயில்களை பயன்படுத்தி வருகின்றனர். காலை மற்றும் மாலை நேரங்களில் இந்த மின்சார ரயில்களில் மக்கள் கூட்டம் அலைமோதும்.

அதன்படி பொன்னேரி - கவரைப்பேட்டை ரயில் நிலையங்களுக்கு இடையே தண்டவாள பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று 21 புறநகர் ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. தண்டவாள பராமரிப்பு பணிகள் காரணமாக இன்றும், பிறகு மே 17ம் தேதியும் 21 புறநகர் ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. காலை 10 மணி முதல் மாலை 5 மணி ரத்து செய்யப்பட்டுள்ளது. சென்னை கடற்கரை கும்மிடிப்பூண்டி செல்லும் ரயில்களும் இன்று ரத்து செய்யப்பட்டுள்ளன. சென்ட்ரல்பொன்னேரி, மீஞ்சூர், எண்ணூர் இடையே 10 சிறப்பு ரயில்கள் இயக்கப்படும்.



வேலூர் பேரணாம்பட்டில், அகில இந்திய மக்கள் மனிதநேய கழகம் சார்பில்

## 8 ஆம் ஆண்டு துவக்க விழா முன்னிட்டு, தண்ணீர் பந்தல் திறப்பு விழா, நலதிட்ட விழா மற்றும் அன்னதானம் வழங்கும் விழா

வேலூர், மே.16-

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தாலுகா, பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில், அகில இந்திய மக்கள் மனிதநேய கழகம் சார்பில் 8 ஆம் ஆண்டு துவக்க விழா முன்னிட்டு, நிறுவனத் தலைவரும் சமூக ஆர்வலருமான AMB. Dr.M.C.சக்திவேல் ஆலோசனைக்கிணங்க, தண்ணீர் பந்தல் திறப்பு விழா, நலதிட்ட விழா மற்றும் அன்னதானம் வழங்கும் விழா மாநிலச் செயலாளரும் சமூக ஆர்வலருமான ஆ. அங்காளன் (எ) கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தலைமை செயற்குழு உறுப்பினர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி தண்ணீர் பந்தலை திறந்து வைத்து, குடிநீர், மோர், பழங்கள் மற்றும் அன்னதானம், அரிசி உள்ளிட்ட நலதிட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து மாநில செயலாளர் அங்காளன் என்கின்ற கோடீஸ்வரன் சிறப்பு அழைப்பாளர்களுக்கும், சிறப்பு விருந்தினர்களுக்கும், பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினர்களாக ஒருங்கிணைந்த மாவட்ட தலைவர் Amb. டாக்டர். ராஜ்பாபு, மாவட்ட செயல் தலைவர் சின்னத்தம்பி, மாவட்ட மகளிர் அணி தலைவர் சரண்யா, மாவட்ட மாணவரணி தலைவர் பரத், தொழிலதிபர் சுரேந்தர், கே எல் எப் மேனேஜர் சுதாகரன், சாதனா பவுண்டேஷன் நிறுவனத் தலைவர் பெருமாள், குடியாத்தம் நகர மன்ற தலைவர் பி வெங்கடேசன், பேர்ணாம்பட்டு நகர செயலாளர் கார்த்திக், நகர துணை தலைவர் சோபன்பாபு, மாவட்ட துணை தலைவர் ரவி, ராமு, குடியாத்தம் சமூக ஆர்வலரும் மூத்த செய்தியாளருமான கேவி ராஜேந்திரன், ஆகியோர் கலந்துகொண்டு இந்த தண்ணீர் பந்தல் திறப்பு நலதிட்ட வழங்கும் விழாவை சிறப்பித்தனர்.

# டெல்டா மாவட்டங்களில் காற்று, இடி, மின்னலுடன் பலத்த மழை: மயிலாடுதுறை கோயிலுக்குள் தண்ணீர் புகுந்தது

திருச்சி, மே.16-

டெல்டா மாவட்டங்களில் நேற்று இரவு காற்று, இடி, மின்னலுடன் பலத்த மழை கொட்டியது. மயிலாடுதுறை மயூரநாதர் கோயிலுக்குள் தண்ணீர் புகுந்ததால் பக்தர்கள் அவதிக்குள்ளாகினர். அந்தமான் கடல் பகுதியில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவி வருவதன் காரணமாக தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக ஒரு சில பகுதிகளில் கோடை மழை பெய்து வருகிறது. டெல்டா மாவட்டங்களில் பல இடங்களில் நேற்று இரவு மழை பெய்தது. கடலோர மாவட்டமான மயிலாடுதுறையில் கடந்த ஒரு வாரமாக அக்னி வெயில் வாட்டி வதைத்து வந்த நிலையில் நேற்று மாலை மாவட்டம் முழுவதும் திடீரென சூறை காற்று, மின்னலுடன் பலத்த மழை கொட்டியது.



திடீர் மழையால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. மயிலாடுதுறை மயூரநாதர் கோயிலுக்குள் மழை நீர் புகுந்தது. முழங்கால் அளவுக்கு தேங்கிய மழைநீரில் பக்தர்கள் சிரமப்பட்டு சாமி தரிசனம் செய்தனர். நாகை மாவட்டத்தில் நள்ளிரவில் பலத்த காற்றுடன் மழை கொட்டியது. திருவாரூர் மாவட்டத்தில் நன்னிலம், நீடாமங்கலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் இரவு 10 மணி முதல் பலத்த மழை பெய்தது. கரூரில் 8 மணி முதல் 9 மணி வரை மின்னலுடன் மழை பொழிந்தது. அதேபோல் புதுக்கோட்டை, திருமயம், அரிமளம் உள்பட மாவட்டம் முழுவதும் பலத்த காற்றுடன் பரவலாக மழை பெய்தது.

திருச்சி நகரில் இரவு 7 மணிக்கு திடீரென மழை பெய்ய தொடங்கியது. இடி, மின்னலுடன் பெய்த மழையால் பல இடங்களில் தண்ணீர் தேங்கியது. டெல்டா மாவட்டங்களில் இடி, மின்னல், சூறை காற்றுடன் பெய்த மழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவியது.

# ஆழ்கடலுக்குள் மனிதனை அனுப்பும் சமுத்ரயான் திட்டம்: அடுத்த ஆண்டு இறுதியில் அறிமுகம்

கொச்சி, மே.16-

ஆழ்கடலுக்குள் மனிதனை அனுப்பும் சமுத்ரயான் திட்டம் அடுத்த ஆண்டு இறுதியில் அறிமுகம் செய்யப்படும் என என்ஐஓடி இயக்குநர் பாலாஜி ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.



கேரள மாநிலம் கொச்சியில் உள்ள மத்திய கடல்சார் மீன்வள ஆராய்ச்சி மையத்தில், ‘நீலப் பொருளாதாரத்தில் மீன்வளத் துறையின் பங்கு’ என்ற தேசிய அளவிலான 5 நாள் பயிற்சி திட்டம் நடைபெறுகிறது. இதை நேற்று முன்தினம் தொடங்கி வைத்த தேசிய கடல் தொழில்நுட்ப மையத்தின் (என்ஐஓடி) இயக்குநர் பாலாஜி ராமகிருஷ்ணன் பேசியதாவது:

சமுத்ரயான் திட்டத்தின் கீழ் ஆழ்கடலுக்குள் மனிதனை அனுப்பி ஆராய்ச்சி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் என்ஐஓடி இந்த திட்டத்தைச் செயல்படுத்தும். ‘மட்ஸ்யா’ என்று பெயரிடப்பட்டுள்ள இந்த திட்டத்தின்படி நீர்மூழ்கி வாகனம் தயாரிக்கப்படுகிறது.

உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படும் இது 25 டன் எடை கொண்ட 4வது தலைமுறை வாகனம் ஆகும். ஆழ்கடலின் தீவிர அழுத்தம் மற்றும் வெப்பநிலையைத் தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இது, 3 விஞ்ஞானிகளை 6 ஆயிரம் மீட்டர் ஆழம் வரை அழைத்துச் செல்லும். இதன் மேல் பகுதி டைட்டானியத்தால் தயாரிக்கப்படுகிறது.

இது இந்தியாவின் ஆழ்கடல் ஆராய்ச்சியில் ஒரு திருப்புமுனையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆழ்கடலில் உள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற வளங்களை மதிப்பிட இந்த திட்டம் உதவும். அத்துடன் விரிவான கடல் கண்காணிப்பு மற்றும் ஆழ்கடல் சுற்றுலாவுக்கான சாத்தியக் கூறுகள் பற்றி அறியவும் இது உதவும். இந்த திட்டத்தை அடுத்த ஆண்டு இறுதியில் அறிமுகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# உதகை 127வது மலர் கண்காட்சியை தொடங்கி வைத்தார் முதல்வர் ஸ்டாலின்: கவனம் ஈர்த்த கல்லணை அலங்காரம்

ஊட்டி, மே.16-

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் புகழ்பெற்ற 127வது மலர்கண்காட்சி தொடங்கியது. முதல்வர் மு க ஸ்டாலின் கண்காட்சி தொடங்கி வைத்தார். இக்கண்காட்சி இன்று தொடங்கி வருகிற 25ம் தேதி வரை 11 நாட்கள் நடைபெறுகிறது.



நீலகிரி மாவட்டத்தில் நிலவும் இதமான காலநிலை மற்றும் இயற்கை வளம் மிகுந்த வனப்பகுதிகள் மற்றும் சுற்றுலா தலங்களைக் கண்டு ரசிக்க தமிழகத்தின் பிற மாவட்டங்கள், வெளி மாநிலங்கள் மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். சுற்றுலா பயணிகளை மேலும் கவரும் விதமாக ஆண்டுதோறும் மே மாதத்தில் கோடை விழா நடத்தப்படுகிறது. கோத்தகிரியில் காய்கறி கண்காட்சியுடன் கோடை விழா கடந்த 3ம் தேதி தொடங்கியது. மேலும் வாசனை திரவிய கண்காட்சி, ரோஜா கண்காட்சியும் நடத்தப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில், 127வது மலர் கண்காட்சி இன்று தொடங்கி வருகிற 25ம் தேதி வரை 11 நாட்கள் நடக்கிறது.

45 ஆயிரம் மலர் தொட்டிகள்: இந்த ஆண்டு சிறப்பு அம்சமாக பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், ஜெர்மனியம் சைக்ளோபின் பால்சம், புதிய ரக ஆர்னமென்டல் கேல், ஓரியண்டல் லில்லி, பேன்சி மேரிகோல்டு, ஜினியா, டெல்முனியம் போன்ற 275 வகையான விதைகள், செடிகள் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் பெறப்பட்டு, மலர் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு பூங்காவில் பல்வேறு பகுதிகளில் 7.5 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டு உள்ளது. இதேபோல் மலர்மாடம் உள்பட பல இடங்களில் 45 ஆயிரம் மலர் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

ராஜராஜ சோழனின் அரண்மனை உருவம்.. விழாவின் முக்கிய அம்சமாக பாரம்பரியத்தை நினைவுபடுத்தும் வகையில் சோழர் பரம்பரை பெருமை குறித்து விளக்கும் வகையில் ராஜராஜ சோழனின் அரண்மனை உருவம் 2 லட்சம் காரனேசன் உட்பட பல்வேறு மலர்களால் அமைக்கப்பட்டு உள்ளது.

இதேபோல் சோழ அரசின் பெருமையை விளக்கும் வகையில் கரிகாலனால் கட்டப்பட்ட கல்லணை உருவம் 65 ஆயிரம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 7 லட்சத்துக்கும் அதிகமான மலர்களால் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு கள்ளிச்செடி மாளிகை மற்றும் கண்ணாடி மாளிகை புதுப்பிக்கப்பட்டு அங்கும் அரியவகை தாவரங்கள் மற்றும் மலர் செடிகள் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் சுற்றுலா பயணிகள், குழந்தைகளைக் கவரும் வகையில் தாவரவியல் பூங்கா முழுவதும் வண்ண விளக்குகள் மற்றும் தோரணங்களால் அழகுபடுத்தப்பட்டு உள்ளது. வழக்கமாக 5 நாட்கள் நடக்கும் மலர் கண்காட்சி இந்த முறை 11 நாட்கள் நடப்பதால் பூந்தொட்டிகள் மற்றும் மலர் செடிகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு உள்ளது.

உள்ளூர் விடுமுறை: பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக அரங்கமும், பல்வேறு அரங்குகளும் அமைக்கப் பட்டுள்ளன. மலர் கண்காட்சியை ஒட்டி நீலகிரி மாவட்டத்துக்கு இன்று (வியாழக்கிழமை) உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது. சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதால் சுமார் 200 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

# காலமானவர் பெயரை நீக்கி, வாரிசுகளின் பெயர் சேர்க்க பட்டா மாற்றத்துக்கு ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம்

சென்னை, மே.16-

பட்டாவில் மறைந்த நில உரிமையாளர்களின் பெயர்களை நீக்கி, வாரிசுகள் மற்றும் தற்போதைய உரிமையாளர்களின் பெயர்களை சேர்க்க இசேவை மையங்கள் அல்லது ‘சிட்டிசன் போர்ட்டல்’ வாயிலாக ஆன்லைனில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம் என நில நிர்வாக ஆணையர் கே.எஸ்.பழனிசாமி தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழகம் முழுவதும் கிராமப்புறம், நகர்ப்புறங்களில் உள்ள நிலங்களின் ஆவணங்கள் கணினிமயம் ஆக்கப்பட்டு, இணையவழியில் அனைவரும் எளிதாக பார்வையிடும் வகையிலும், அச்சிட்டு பயன்படுத்தும் வகையிலும் இணையதளம் (https://eservices.tn.gov.in) வாயிலாக மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. இருப்பினும், பல சிட்டாவில் உள்ள பட்டாதாரர்களில் உயிரிழந்தவர்கள் பெயர்கள் நீக்கப்படாமலும், அவர்களுக்கு பதில் வாரிசுதாரர்கள் அல்லது தற்போதைய உரிமையாளர்கள் பெயர்கள் சேர்க்கப் படாமலும் உள்ளன.

இந்த திருத்தங்களை மேற்கொள்ள மக்கள் உரிய ஆவணங்களுடன் இசேவை மையங்கள் அல்லது ‘citizen portal’ தளம் மூலமாக விண்ணப்பிக்கலாம். அதற்கு, இறப்பு சான்று, வாரிசு சான்று, வாரிசுகளில் எவரேனும் இறந்திருந்தால் அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்று, பட்டா மாறுதல் கோரும் புலம் தொடர்பான வில்லங்க சான்றிதழ், பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை, தான செட்டில்மென்ட் அல்லது உயில் சாசன ஆவண நகல், நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பட்டா மாறுதல் கோரப்பட்டால் உரிமையியல் நீதிமன்ற தீர்ப்பின் நகல் ஆகியவற்றை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

கிரையம் பெற்றவர்களாக இருந்தால், இறப்பு சான்று, வாரிசு சான்று, வாரிசுகளில் எவரேனும் இறந்திருந்தால் அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்று, பட்டா மாறுதல் கோரும் புலம் தொடர்பான வில்லங்க சான்று, பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண நகல் ஆகியவற்றை இணைத்து விண்ணப்பிக்கலாம். அடுத்து வரும் ஜமாபந்தியில் இவை பரிசீலிக்கப்பட்டு, பட்டாதாரர்கள் பெயர் மாற்றம் தொடர்பான உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, நில ஆவணங்களில் உரிய மாற்றங்கள் செய்யப்படும்.

உட்பிரிவு இல்லாத பட்டா மாறுதலுக்கு விண்ணப்பிக்கும்போது, கிராம நிர்வாக அலுவலர் அவற்றை சரிபார்த்து, இணைய வழியில் மண்டல துணை வட்டாட்சியருக்கு அனுப்புவார். அவர் அந்த விண்ணப்பத்தை சரிபார்த்து நீதிமன்ற வழக்குகள் ஏதும் நிலுவையில் இல்லை என்பதை உறுதி செய்த பிறகு, ஒப்புதல் அளிப்பார். உட்பிரிவுடன் கூடிய பட்டா மாறுதலை பொருத்தவரை, நில அளவர் ஆவணங்களை சரிபார்த்து, நிலத்தை அளவீடு செய்து, வட்டாட்சியர் ஒப்புதலுக்கு அனுப்புவார்.

அவர் ஆவணங்களை சரிபார்த்து, நீதிமன்ற வழக்கு இல்லை என்பதை உறுதி செய்து ஒப்புதல் அளிப்பார். பட்டா மாறுதல் தொடர்பாக இணையவழியில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி தாமதமின்றி உரிய உத்தரவுகள் பிறப்பிக்க வட்டாட்சியர்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# சிந்தூர் வெற்றியால் ரபேல் நிறுவனத்தின் பங்கு விலை உயர்வு

புதுடெல்லி, மே.16-

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் ரபேல் போர் விமான முக்கிய பங்கு வகித்த நிலையில் அந்த நிறுவன பங்குகளின் விலை உயர்ந்து வருகிறது.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது பிரான்சின் ரபேல் போர் விமானங்களும் முக்கிய பங்கு வகித்தன. இரு நாடுகளுக்கு இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ள நிலையில், நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, தீவிரவாதத்துக்கு எதிரான லட்சுமண ரேகையைத் தாண்டினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், பாரிஸ் பங்குச் சந்தையில் ரபேல் விமானங்களை தயாரிக்கும் பிரான்சின் தஸ்ஸோ ஏவியேஷன் நிறுவன பங்குகள் விலை 2வது நாளாக நேற்றும் உயர்ந்தன. வர்த்தகத்தின் இடையே ஒரு பங்கின் விலை 1.5% உயர்ந்து 305 யூரோவாக இருந்தது. கடந்த ஓராண்டில் இந்த பங்கு 43% உயர்ந்துள்ளது.



# கடலுக்குள் காற்றாலை மின்னுற்பத்தி: டென்மார்க் பிரதிநிதிகளுடன் மின்வாரிய அதிகாரிகள் ஆலோசனை

சென்னை, மே.16-

கடலுக்குள் காற்றாலை மின்னுற்பத்தி செய்வது தொடர்பாக, டென்மார்க் நாட்டு எரிசக்தி முகமை அதிகாரிகளுடன், தமிழ்நாடு மின்வாரிய தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன் தலைமையில் அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர்.

தமிழகத்தில் தூத்துக்குடி முதல் கன்னியாகுமரி வரை கடலுக்குள் 30 ஆயிரம் மெகாவாட் திறனில் காற்றாலை மின்னுற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறு இருப்பதை மத்திய அரசு கண்டறிந்துள்ளது. இத்திட்டத்தை தனியார் நிறுவனங்கள் மூலம் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. கடலில் அமைக்கப்படவுள்ள காற்றாலைகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் முழுவதையும் தங்களுக்கு வழங்க வேண்டும் என மத்திய அரசிடம், தமிழக அரசு கோரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், கடலுக்குள் காற்றாலை மின்னுற்பத்தி செய்வது தொடர்பாக, டென்மார்க் நாட்டின் டேனிஷ் எனர்ஜி ஏஜென்சி, டென்மார்க் தூதரகம், தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழகம் இடையே உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது.

இதில் மின்வாரிய தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன், டென்மார்க்கின் எரிசக்தி முகமை துணை இயக்குநர் ஸ்டைன் லெத் ரச்முசன், தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், உலகளாவிய ஒத்துழைப்பு மைய சிறப்பு ஆலோசகர் கரோலின் செஜர் டம்கார்ட் மற்றும் மின்வாரிய உயர் அலுவலர்கள் பங்கேற்றனர். கடலுக்குள் காற்றாலை மின்னுற்பத்தி அமைப்பை ஏற்படுத்த சிறந்த தொழில்நுட்ப கட்டமைப்புகள் டென்மார்க் நாட்டிடம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# செஞ்சியில் ஒரே மையத்தில் பிளஸ் 2 வேதியியலில் 167 பேர் சென்டம் எப்படி? கல்வி அலுவலர் விளக்கம்

விழுப்புரம், மே.16-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியத்தில் ஒரே மையத்தில் பிளஸ் 2 வேதியியல் பாட தேர்வில் 167 மாணவர்கள் முழு மதிப்பெண் பெற்றுள்ளதால் எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கு முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் விளக்கம் அளித்துள்ளார்.



தமிழகத்தில் பிளஸ் 2 தேர்வு முடிவு கடந்த 8ம் தேதி வெளியானது. இதில், விழுப்புரம் மாவட்டத்தில் 192 பள்ளிகளில் தேர்வு எழுதிய 21,581 மாணவ மாணவிகளில் 20,526 மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றனர்.

தேர்ச்சி சதவீதம் 95.11 ஆகும். இந்நிலையில், செஞ்சி ஒன்றியத்தில் வேதியியல் பாடத்தில் 251 மாணவ மாணவிகள் 100க்கு 100 மதிப்பெண் பெற்றுள்ளனர். இதில், ஒரு மையத்தில் தேர்வு எழுதிய 167 மாணவர்கள் முழு மதிப்பெண் பெற்றுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. இதனால், முழுமூச்சாக படித்து தேர்வு எழுதி 100 சதவீத மதிப்பெண் பெற்றுள்ள மாணவர்களும், அவர்களது பெற்றோரும் மன உளைச்சலில் உள்ளனர்.

இதுகுறித்து பள்ளிக் கல்வித்துறை தீவிர விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதுகுறித்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் கூறும்போது, “செஞ்சி அரசு பெண்கள் பள்ளி தேர்வு மையத்தில் 3 பள்ளிகளைச் சேர்ந்த 414 மாணவ, மாணவிகள் தேர்வு எழுதினர். இவர்களில் செஞ்சி அரசு பெண்கள் பள்ளி மாணவிகள் 65 பேர், தனியார் பள்ளியை சேர்ந்த 148 மாணவர்களில் 91 பேர், மற்றொரு தனியார் பள்ளியை சேர்ந்த 138 பேரில் 11 பேர் என 167 பேர், வேதியியல் பாடத்தில் முழு மதிப்பெண் பெற்றுள்ளனர்.

இம்மாணவர்கள் நன்றாக படிக்கக் கூடியவர்கள். பிளஸ்1 பொதுத்தேர்வில் சிறந்த விளங்கியவர்கள். பிளஸ் 2 வகுப்பில் குறுந்தேர்வு நடத்தி சிறந்த முறையில் ஆசிரியர்கள் பயிற்சி அளித்துள்ளனர். மாநில அளவில் 3,181 மாணவ மாணவிகள் வேதியியல் பாடத்தில் முழு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

இயற்பியல் பாடத்தைக் காட்டிலும் வேதியியல் பாடத்தில் வினாக்கள் எளிமையாக இருந்ததாக மாணவர்கள் கூறியிருந்தனர். தேர்வில் எந்த முறைகேடும் நடைபெறவில்லை, நடப்பதற்கு வாய்ப்பும் இல்லை. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து தேர்வு மையங்களிலும் பறக்கும் படை குழுவினர் தீவிரமாக கண்காணித்தனர்.

வினாத்தாள் வைக்கப்பட்டிருந்த மையங்களிலும் போலீஸ் பாதுகாப்பு இருந்தது. செஞ்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட தேர்வு மையங்களில் துணை இயக்குநர் குழந்தை ராஜன் ஆய்வுப் பணியில் ஈடுபட்டார். போலீஸ் பாதுகாப்புடன் வினாத்தாள்களை குறிப்பிட்ட நேரத்தில், தேர்வு மையத்துக்கு கொண்டு சென்று ஒப்படைக்கப்பட்டது. இதற்கான விளக்கத்தை பள்ளிக் கல்வித் துறையிடம் அளிக்க தயாராக உள்ளோம்” என்று தெரிவித்தார்.

# திரைப்பட கல்லூரியில் சேர விண்ணப்பிக்கலாம்

சென்னை, மே.16-

பிளஸ் 2 முடித்த மாணவர்கள் சென்னையில் உள்ள அரசு திரைப்படக் கல்லூரியில் சேர மே 28 வரை விண்ணப்பிக்கலாம்.




இதுதொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது: தமிழக அரசின் எம்ஜிஆர் திரைப்படம் மற்றும் தொலைக் காட்சி பயிற்சி நிறுவனம் சென்னை தரமணியில் அமைந்துள்ளது.

இக்கல்லூரியில் ஒளிப்பதிவு, டிஜிட்டல் இன்டர்மீடியேட், ஒலிப்பதிவு, இயக்கம் மற்றும் திரைக்கதை எழுதுதல், எடிட்டிங், அனிமேஷன் மற்றும் விஷுவல் எஃபெக்ட்ஸ் ஆகிய 6 பாடங்களில் இளங்கலை பட்டப்படிப்பு (பேச்சிலர் ஆப் விஷுவல் ஆர்ட்ஸ்) வழங்கப்படுகிறது. இப்படிப்புகளில் வரும் கல்வி ஆண்டில் (2025 2026) சேருவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பம் மற்றும் விளக்க கையேட்டை www.filminstitute.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை விண்ணப்ப கட்டணம் மற்றும் தேவையான ஆவணங்களுடன் மே 28ம் தேதி மாலை 5 மணிக்குள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்க பிளஸ் 2 முடித்திருக்க வேண்டும்.



# தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய்த்தீர்வாயம் 1434ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாயம் ஜமாபந்தி நடைபெற்றது

தாம்பரம், மே.16-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய்த்தீர்வாயம் 1434ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாயம் ஜமாபந்தி தீர்வாய அலுவலரி என்.முரளி தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா கலந்து கொண்டு பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், பகுதி செயலாளர் இரா.சுரேஷ், வட்டாட்சியர் ஆர்.ராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் சி.சுரேஷ், பி.ஜோதிகுமார், பி.புகழேந்தி, வட்ட செயலாளர் மு.வினோத், துணை வட்டாட்சியர், வருவாய் அலுவலர்கள், கிராம நிர்வாகி அலுவலர்கள், பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




## பெருங்களத்தூர் வடக்கு பகுதி 32வது வட்ட திமுக சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்

தாம்பரம், மே.16-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 32வது வட்ட திமுக சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் தாம்பரம் மாநகரத் துணைச் செயலாளர் மேயர் க.வசந்தகுமாரி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் தாம்பரம் தொகுதி பார்வையாளர் இளம்சுருதி, தலைமை கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன், தலைமை கழக இளம் பேச்சாளர் ச.பேரசன், பகுதி கழகச் செயலாளர், மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி, கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், ரமணி அதிமூலம், செ.சுரேஷ், லிங்கேஸ்வரி பாபு, எல்.பெரியநாயகம் மற்றும் மாநகர, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, கழகத் நிர்வாகிகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## நாடார் உறவின் முறைக்கு பாத்தியமான அருள்மிகு ஸ்ரீ பராசக்தி அம்மன் திருக்கோவிலின் 39ம் ஆண்டு உற்சவ விழா

தேனி, மே.16-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் நாடார் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ பராசக்தி அம்மன் திருக்கோவிலின் 39 ஆண்டு உற்சவ விழாவினை முன்னிட்டு மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக புதன்கிழமை மதியம் 11 மணிக்கு மேல் விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சியும் நடைப்பெற்றன. விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்கள் அனைவருக்கும் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது. மாலை 7.30 மணிக்கு மேல் பக்தர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர்கள் முளைப்பாரி எடுத்து நகர் வலமாக ஆற்றுக்குச் சென்றனர். முளைப்பாரி எடுத்த பக்தர்களுக்கு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. இவ்விழாவின் தலைவர் ரவிச்சந்திரன், செயலாளர் ராஜேஸ், பொருளாளர் மதியழகன், துணைத் தலைவர்கள் செல்வகுமார், துணைத் தலைவர் துனேஷ்குமார், துணைச் செயலாளர் ஆனந்த்ராஜ், துணைச் செயலாளர் செல்வக்குமார் மற்றும் விழா கமிட்டியாளர்களும் நாடார் உறவின் முறைக்கு பாத்தியப்பட்டோர்களும் அப்பகுதி பொதுமக்களும் கலந்துகொண்டு அம்மனின் அருளை பெற்றுச் சென்றனர்.



## ஸ்ரீ ஐயகிரீவர் செஸ் அகாடமி சார்பில் பள்ளிகாரணை வேலம்மாள் போதி கேம்பஸ் பள்ளியில் மாநில அளவிலான சதுரங்க போட்டிகள்

பள்ளிகாரணை, மே.16-

செங்கல்பட்டு மாவட்டம் பள்ளிகாரணையில் ஸ்ரீ ஐயகிரீவர் செஸ் அகாடமி சார்பில் அதன் செயலாளர் திருமதி கோகிலா ராஜேஷ் ஏற்பாட்டில் பள்ளிகாரணை வேலம்மாள் போதி கேம்பஸ் பள்ளியில் மாநில அளவிலான சதுரங்க போட்டிகள் நடைபெற்றது.

தமிழ்நாட்டின் செங்கல்பட்டு, சென்னை, கார்சிபுரம், ராணி பேட்டை, வேலூர், திருப்பத்தூர், கோவை, கடலூர், விழுப்புரம், திருநெல்வேலி என அனைத்து மாவட்டங்களில் இருந்து 8, 10, 13, மற்றும் 25 வயதுக்கு உட்பட்டோர் கலந்து கொண்ட இப்போட்டிகளில் சுமார் 600 கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு விளையாடினர்.

வயது வாரியாக ஆண்கள், பெண்கள் என இருபாலருக்கும் தனித்தனியாக தலா 6 சுற்றுக்களாக நடைபெற்றன. இதில் முதல் 30 இடங்களை பிடித்து வெற்றி பெற்ற 240 பேர்களுக்கு மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வேலம்மாள் போதி கேம்பஸ் பள்ளி முதல்வர் ஜமுனா, துணை முதல்வர் செல்லாம் பிகை, தாம்பரம் மாநகராட்சி 48-வது வார்டு கவுன்சிலர் சசிகலா கார்த்திக், தாம்பரம் மாநகராட்சி 64வது வார்டு கவுன்சிலர் ஷகிலா நான்சி, செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக துணை தலைவர் கிருஷ்ணமூர்த்தி. ஆகியோர் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு கோப்பைகளை வழங்கி பாராட்டினர்.

மேலும் இப்போட்டிகளில் கலந்து கொண்டு விளையாடிய 8 வயது அனைவருக்கும் சிறப்பு பரிசாக கோப்பைகள் வழங்க பன. மேலும் இந்த நிகழ்வில் பள்ளி ஊழியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், செங்கப்பட்டு மாவட்ட சதுரங்க கழக நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்று சிறப்பித்தனர்

## பழனி ரெணகாளியம்மன் கோவில் மூன்று நாள் சித்திரை திருவிழா

திண்டுக்கல், மே.16-

திண்டுக்கல் மாவட்டம் பழனி புது தாராபுரம் ரோட்டில் அமைந்துள்ள பழமை மிக்க ரெணகாளியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலின் சித்திரைத் திருவிழா 3 நாட்கள் நடந்தது முதல் நாள் இரவு அழகாய் ஊற்றில் இருந்து அம்மன் கரகம் அலங்கரித்து கரகாட்டம், வான வேடிக்கையுடன், மேளதாளம் முழங்க அம்மன் கோவிலுக்கு கொண்டு வரப்பட்டது. 2வது நாளான காலை நான்கு மணிக்கு மாவிளக்கு, முளைப்பாரி, அக்னிச்சட்டி, பால்குடம் எடுத்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.



இதைத்தொடர்ந்து பொங்கல் வைத்து கிடா வெட்டி பக்தர்கள் தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர். அலகு குத்தி காவடி எடுத்து. தீச்சட்டி எடுத்தல் பக்தர்கள் ஊர்வலமாக வந்தனர். பின்னர் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் நடந்தது.

3வது நாள் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை அன்னதானம் வழங்கப்பட்டது. பின்னர் மாலை 4 மணிக்கு மேளதாளம் முழங்க கரகாட்டம் ஆடி பெண்கள் முளைப்பாரி எடுத்தனர். இதைத்தொடர்ந்து மஞ்சள் நீராடி, வான வேடிக்கையுடன். புதிய தாராபுரம் ரோடு வழியாக கவுண்டன்குளம் இந்திரா நகர் ஓம் சண்முகா தியேட்டர் அண்ணா சாலை குபேரபட்டினம் வழியாக வந்து அம்மன் வீதி உலா நடந்தது. வழிநெடுகிலும் குடங்களில் தண்ணீர் ஊற்றி, வாழைப்பழம், தேங்காய், கற்பூரம் ஏற்றி சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டனர். இரவு 7 மணிக்கு அம்மன் பூஞ்சோலை வந்தடைந்தது. இவ்விழாவில் காவல் அதிகாரிகள் சமூக ஆர்வலர்கள் அரசியல் பிரமுகர்கள் மற்றும் பழனியை சுற்றியுள்ள ஐயாயிரத்திற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவுக்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள், பொதுமக்கள் செய்திருந்தனர்.



■ தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் 14வது வார்டு தினசரி காய்கறி மார்க்கெட்டில் அமைந்துள்ள அருள்மிகு சிறுவர் காளியம்மன் திருக்கோவில் உற்சவ விழாவினை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை மாலை 7.30 மணிக்குமேல் அம்மனுக்கு கொடியேற்றும் விழா மற்றும் காப்பு கட்டும் நிகழ்ச்சி சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் விழா கமிட்டியின் தலைவர் எம். எஸ். ராமசுப்பிரமணியம் என்கின்ற ரமேஷ் அவர்களும், கொடியேற்ற நிகழ்ச்சிக்கு வருகை புரிந்த 14 வார்டு நகர்மன்ற உறுப்பினர் கலையரசி முருகன், பாஜக முன்னாள் தலைவர் சந்திரசேகர், கண்ணன், செல்வகுமார், நாகராஜ், சின்னசாமி, முருகன், பிரசன்னா, அங்குவேல், வினோத் மற்றும் இளைஞர் அணி, தினசரி காய்கறி மார்க்கெட் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களும் பக்தகோடிகளும் கொடியேற்ற நிகழ்சியில் கலந்து கொண்டனர்.




■ திருப்பூர் மாவட்டம் திருப்பூர் நெடுஞ்சாலை துறை சார்பில் நெடுஞ்சாலை துறை சாலைகளில். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை போக்குவரத்து செறிவு அறிவிக்கப்பட்டதன் படி திருப்பூர் மாநகரில் நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வடக்கு உட்கோட்டம் சார்பாக திருப்பூர் வடக்கு பிரிவு கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளில் 2025 காண போக்குவரத்து செறிவு எடுக்கப்பட்டு வருகிறது அவற்றை உதவி கோட்ட பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆய்வு மேற்கொண்டனர்.



## துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம்

### மாணவி செல்வி தனிஸ்கா செந்தில்குமார் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் கேலோ சந்தித்து வாழ்த்து பெற்றார்

திருப்பூர், மே.16-

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் நேற்று முன்தினம் (14.05.2025) திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டெல்லியில் தேசிய அளவில் நடைபெற்ற கேலோ இந்தியா போட்டியில் 18 வயதிற்குட்பட்டோர் துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற பள்ளி மாணவி செல்வி தனிஸ்கா செந்தில்குமார் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

7th Khelo India Youth Game 2025 (Bihar), போட்டியானது 5th to 10th may, 2025, Dr.KSSR, New Delhiயில் தேசிய அளவில் நடைபெற்ற 18 வயதிற்குட்பட்டோர் துப்பாக்கி சுடுதல் போட்டிகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் கலந்து கொண்டார்கள். இப்போட்டியில் பிளாட்டோஸ் பள்ளி மாணவி தனிஸ்கா செந்தில்குமார் கேலோ இந்தியா 2025 மகளிர் டிராப் துப்பாக்கி சுடும் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றதையொட்டி மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட விளையாட்டு நல அலுவலர் ரகு குமார், பிளாட்டோஸ் பள்ளி தாளாளர், கொங்குநாடு ரைபிள் கிளப்பின் பயிற்சியாளர் உடனிருந்தனர்.




## பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் சாதனைகளை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம்

பல்லாவரம், மே.16-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் நாடு போற்றும் நான்கு ஆண்டு தொடரட்டும் பல்லாண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கழக அரசின் சாதனைகளை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் ஜமீன் பல்லாவரம் பகுதியில் பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயலாளர் மண்டல தலைவருமான இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலா ளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகரச் செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, க.ஒப்பிலாமணி, மா.பூபதி ஆகியோர் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார்கள் அப்பொழுது பல்லாவரம் தெற்கு பகுதி கழக செயலாளர் இ.எஸ். பெர்னார்ட், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், பொதுக் குழு உறுப்பினர் மு.ரஞ்சன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன், வட்ட கழக செயலாளர் டி.எச்.பிரான்சிஸ் பால் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக செயலாளர்கள் இளைஞர் அணி, மாணவரணி, மகளிர் அணி, கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



## பம்மல் தெற்கு பகுதிகழக திமுக சார்பில் கழக ஆட்சியின் சாதனை விளக்க மற்றும் நலதிட்ட உதவி வழங்கி பொதுகூட்டம்

பம்மல், மே.16-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட பம்மல் நாகல்கேனி பகுதியில் காஞ்சி வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பம்மல் தெற்கு பகுதி கழக திமுக சார்பில் கழக ஆட்சியின் சாதனை விளக்க மற்றும் நலதிட்ட உதவி வழங்கி பொதுகூட்டம் பம்மல் மண்டல குழுத் தலைவரும் பம்மல் தெற்கு, பகுதி செயலாளருமான வே.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. பொது கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தலைமை கழக பேச்சாளர் திருப்பத்தூர் ரஜினி. கலந்து கொண்டு நான்கு வருட. திமுக ஆட்சியின் சாதனைகள் குறித்து சிறப்புரையாற்றினர். இதில் மாமன்ற உறுப்பினர்கள் சத்யா மதிழகன், ரம்யா சத்யபிரபு மற்றும் பம்மல் தெற்கு பகுதிகழக நிர்வாகிகள், மகளிரணியினர் அணி சார்ந்த நிர்வாகிகள். உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து 1,000 கனஅடியாக அதிகரிப்பு

மேட்டூர், மே.16-

ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து விநாடிக்கு 1,000 கனஅடியாக அதிகரித்துள்ளது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியில் கடந்த 11ம் தேதி விநாடிக்கு 1,500 கனஅடியாக இருந்த நீர்வரத்து 12ம் தேதி காலை 1,200 கனஅடியாகவும், 13ம் தேதி காலை 700 கனஅடியாகவும் குறைந்தது. இந்நிலையில், நேற்று காலை நீர்வரத்து விநாடிக்கு 1,000 கனஅடியாக அதிகரித்துள்ளது.



இதனிடையே, மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 714 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று 390 கனஅடியாக குறைந்தது. அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1,000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் நேற்று 108.06 அடியாகவும், நீர்இருப்பு 75.68 டிஎம்சியாகவும் இருந்தது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161